முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1486

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**24.10.2023,** செவ்வாய்கிழமை

1. கந்தவேலன் என் அவதாரமாக வந்த
கருணைமிகுந்த ஆறுமுக அரங்கனே
சிந்தை வைத்து இந்த பேருலகில்
செப்பிடுவேன் உலகோர்கள் சித்திபெற
2. சித்திபெற தர்மஞான வழிகளை
சிறந்த ஞானவழிகளாக அருளுகின்ற
அருளுகின்ற அரங்கனே ஞானதேசிகனே
அய்யனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
3. வரமென ஞான அறிவுரை ஆசி
வழங்குவேன் சோபகிருது துலையின்திங்கள்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 07ம் நாள், 24.10.2023, செவ்வாய்கிழமை)
திங்களிலே அரங்கன் மகாசக்திகூட
தெரிவிப்பேன் ஆறுமுகன்யான் பலமான வழிமுறைகள்
4. முறையாக அரங்கனுக்கு தருகின்ற
முழுமைபட சூலவேலை உணவுமுறை
அறமாக ஆறுமுகன் யான் அருளமுதாக்கி
அரங்கனுக்கு சக்திகூட்டி வருகின்றேன்
5. வரமாக அரங்கனுக்கு இயன்ற வண்ணம்
வையகத்தில் ஔஷத முறைகளும் கூட
தருகின்ற காலம் அரங்கனுக்கு தவமுறையாக
தக்கபடி மாற்றி ஆறுமுகன் காக்கின்றேன்
6. காக்கவே அரங்கனுக்கு சூட்சுமமாக
கலியினில் பல மகா அஸ்தரங்களை
வகையாக காக்கும் வல்லமையாக
வரம்தந்து அரங்கன் அறைமுழுக்க நிரப்பியுள்ளேன்

7. உள்ளபடி அரங்கனுக்கு எதிர்ப்புஏது
உலகத்தில் அரங்கனை நெருங்கும் எதிர்சக்திகளெல்லாம்
இல்லாமல் கடந்து போகி இந்தயுகத்திலே இல்லா
இயம்பிடுவேன் வீழக்கூடுமப்பா

8. அப்பனே அரங்கன் பலம் கூடுவதற்கு
ஆறுமுகன் இன்னும் பல்வேறு மகாசக்திகளை
சக்திகளை பிரணவக் குடிலுக்குள்ளும்
சாற்றிட பேருலகமெங்கிலும் நிரப்பி

9. அரங்கன் அவதார நோக்கம் வெற்றிகொள்ள
நிலைத்தன்மையை உலகமெங்கும் உருவாக்கியுள்ளேன்
உள்ளபடி அரங்கனின் நாமஜெபம்
உயர்வாக சொல்லி நடக்கின்ற தர்மசாலையெல்லாம்

10. ஆறுமுகன் காத்து அங்கு ஆட்சிபுரிகின்றேன்
வகைபட அன்னதனால் கலியுகத்தார்
வரம்பெற பிரணவக்குடில் வந்தால் போதும்
வணங்கி அரங்கனை பணிந்தால் போதும்

11. போதுமப்பா யாவர்க்கும் என்காட்சி
புண்ணிய வடிவில் தரநேருமென்பேன்
நேர்மைகொண்டு அரங்கனை தொடர்ந்தால்
நிலவுலகில் அவர்களெல்லாம் ஞானிகளாவர்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–